# யூலை – 18 – புதன்

## புனித கமிலஸ் டீ லெலிஸ்

## “ஆம் தந்தையே இதுவே உமது திருவுளம்” -மத்11:26

**முதல் வாசகம் : ஏசாயா10 : 5 – 7, 13 – 16**

ஆண்டவர் கூறுவது “சிரியா எப்ராயிமோடும் இரமலியாவின் மகனோடும் உனக்கெதிராய்ச் சதித்திட்டம்தீட்டி,“யூதாவுக்கு எதிராய் நாம் படை எடுத்துச்சென்று அதை நடுநடுங்கச் செய்வோம் அதற்கு எதிராய்ப்போரிட்டு, அதைப்பிடித்து தயேல் என்பவனின் மகனை அதற்கு அரசனாக்குவோம்“ என்று தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள்.”ஆதலால் ஆண்டவர் இவ்வாறு உரைக்கிறார் ”அவர்களது திட்டம் நிலைத்து நிற்காது, அது ஒருபோதும் நிறைவேறாது.ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவள் “இம்மானுவேல்“ என்று பெயரிடுவார்.தீமையைத் தவிர்த்து, நன்மையை நாடித்தேர்ந்து கொள்வதற்கு அறியும்போது அவன் வெண்ணெயையும், தேனையும் உண்பான்.அந்தக்குழந்தை தீமையைத் தவிர்த்து, நன்மையை நாடித் தேர்ந்து கொள்வதற்குமுன், உம்மை நடுநடுங்கச் செய்யும் அரசர்கள் இருவரின் நாடுகளும் பாலை நிலமாக்கப்படும்“ என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்களைத் தள்ளிவிடார்.

**நற்செய்தி : மத்தேயு 11 : 25 – 27**

அக்காலத்தில் இயேசு கூறியது, ”தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும்இ அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்.ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என்தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்” என்று கூறினார்.

**தியானம்:** இயேசு தமது போதனையைச் சாதனையாக்க நற்செய்தியில் அழைப்பு விடுப்பதனை நாமவதானிக்கலாம். கடவுளின் ஆட்சி நெருங்கிவருகிறது என இயேசு கூறுவதைச் சிலர் ஏற்கின்றனர். பலர் மறுக்கின்றனர். இயேசுவின் சொல்லின் உண்மையை உணர்ந்தவர்களை திறந்த உள்ளமுடைய “குழந்தைகள்“ என அழைக்கிறார். குழந்தைகள் பெற்றோரையும், பிறரையும் சார்ந்திருப்பவர்கள். அவர்களுடைய சொந்தசக்தியால் யாதும் நடக்கவியலாததோடு, தமக்குத் தேவையானதைப் பெறுவதற்குக் குழந்தைகள் பிறரைத்தான் நம்பியிருக்கவேண்டும். இயேசு இந்த உண்மையை உணர்த்துவதற்காகக் “கடவுளாட்சி குழந்தைகளுக்குரியது“ என அறிவித்தாக நற்செய்தியை நாம் பொருள்கொள்ள இடமுண்டு. தம்மைப் பெரியவர்களாக உயர்ந்தோராாகக் கருதுகின்றவர்கள் கடவுளாட்சிபற்றிய நற்செய்தியின் உண்மைப்பொருள் என்னவென்று உணரத் தவறிவிடுகிறார்கள். எனவே, இன்றைய நற்செய்தியை சுருக்கிக்கூறுவதாயின், தம்மைப் பெரியமனிதர்களாக அல்லது சமூகத்தில் உயர்நதவர்களாகக் கருதுவோர் அனைவரும் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாவர் எனவும் ஞானிகள், விவேவிகள், அறிவாளிகள் மற்றும் ஆணவக்காரர்கள் இறைவனைக் காணமாட்டார்கள் எனவும் இயேசு தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ஆயினும், குழந்தைகள் போன்று எளிய மனத்தோராய் அகங்காரம், ஆணவம், ஆர்ப்பரிப்பு இல்லாது எதிலும் தெய்வத்தையே நம்பி வாழ்வோர எல்லாம வல்ல இறைவனின் தரிசனம் பெறுவார்கள் எனத் தெரிவிப்பதனை நாம் அவதானிக்கலாம். கடவுளைச் சார்ந்து வாழும் மனிதர்களை கடவுள் ஒருபோதும் கைவிடார் என்பதற்கு அன்னை மரியாளும், புனிதர்களும் முன்னுதாரனமாகவும், மேல்வரிச்சட்டமாகவும் உள்ளனர். இத்தகையோருக்கு தெய்வீக ஆட்சியில் குறையேயில்லை. எல்லாச்சூழலிலும் கடவுள் அவர்களோடிருப்பார். தந்தை இறைவன் தம்திருவுளத்தை இத்தகையோருக்கு வெளிப்படுத்துவதால் தெளிவு, திறமை, திடம்பெற்று “இதோ உமது அடிமையென“ முற்றிலுமாகக் கடவுளிடம் கையளித்து, திறந்த உள்ளத்தோடு கடவுளை யார் அணுகிச் செல்கின்றார்களோ, அவர்களே இறையாட்சியின் நற்செய்தியைப் புரிந்துகொள்வார்கள் என்பதனை நற்செய்தி எமக்குத் தெளிவுபடுத்துகிறது. இதனால், கடவுள் ஆள்பார்த்துச் செயல்படுகிறார் என நாம் முடிவுகட்டலாகாது. மாறாகக், குழந்தைபோன்ற திறந்த உள்ளத்தோடு நாம் கடவுளை அணுகிச் செல்லவேண்டும் என்பதே அவருடைய விருப்பம். ஆயினும் நாம் தயாரா?